(இவ் அறிவுறுத்தல் பத்திரம், விண்ணப்பப் படிவத்துடன் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது)

**குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்**

**வெளிநாட்டில் இலங்கையரின் அடையாளம்**

## கடவுச்சீட்டுக்காக விண்ணப்பிப்போருக்கான அறிவுறுத்தல்கள்

(விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன் எல்லா அறிவுறுத்தல்களையும் நன்கு வாசித்து விளங்கவும்)

**(அ) K கு.கு. 35A விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்:**

1) நீங்கள் பயண ஆவணத்தை (கடவுச்சீட்டை) பெற்றுக் கொள்ள எதிர்பார்ப்பது, சாதாரண சேவையின் மூலமாகவா? அல்லது ஒரு நாள் சேவை மூலமாகவா? என்பதைக் குறிப்பிடவும். (உரிய கூண்டினுள் "√" அடையாளத்தை இடவும்)

**2) தேவையான பயண ஆவணத்தின் (கடவுச்சீட்டின்) வகை :**

   i. எல்லா நாடுகளுக்கும்,
   ii. மத்திய கிழக்கு நாடுகள் உட்பட குறித்துரைக்கப்பட்ட நாடுகளுக்கு (இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், பாகிஸ்தான், மாலைத்தீவுகள் குடியரசு, ஈரான், ஈராக், லெபனான், சிரியா, ஜோர்தான், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம் (UAE) ஓமான், குவைத், கட்டார், பஹ்ரேன், யெமன்)
   iii. அவசர சான்றிதழ்கள் - (இந்தியா, நேபாளம்)
   iv. அடையாளச் சான்றிதழ் - எல்லா நாடுகளுக்கும் அல்லது குறித்துரைக்கப்பட்ட நாடொன்றிற்கு செல்லுபடியாகும் விதத்தில் விநியோகிக்கப்படும். (உரிய கூண்டினுள் தேவையான கடவுச் சீட்டு வகைக்கு "√" அடையாளத்தை இடவும்)

3) நீங்கள் கடவுச்சீட்டொன்றைப் பெற்றுக் கொண்டிருப்பின் கடைசியாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பயண ஆவணத்தின் (கடவுச்சீட்டு/ அவசர சான்றிதழ்/ அடையாளச் சான்றிதழ்) இலக்கத்தைக் குறிப்பிடவும். இந் நாட்டில் அது தொலைந்திருப்பின் பொலிஸ் நிலையத்திற்குச் செய்த முறைப்பாட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியுடன் அல்லது வெளிநாட்டில் தொலைந்திருப்பின் இந்நாட்டிற்கு வருவதற்காக பாவித்த தற்காலிக பயண ஆவணத்தை அதன் நிழற் பிரதியுடன் சமர்ப்பிக்க வேண்டும். (முதற் தடவையாக விண்ணப்பிப்போருக்கு இது ஏற்புடையாகாது)

4) நீங்கள் இயந்திரத்தினால் வாசிக்க முடியாத (NMRP) கடவுச்சீட்டின் மூலம் வெளிநாட்டிலிருந்து இந் நாட்டிற்கு வந்திருப்பீர்களாயின். அக் கடவுச்சீட்டின் இலக்கத்தை குறிப்பிடுக. அத் தற்காலிக கடவுச்சீட்டை அதன் நிழற் பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

5) ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் விநியோகிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை இலக்கத்தை குறிப்பிடவும். 16 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் தமது தேசிய அடையாள அட்டையை அதன் நிழற் பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

6) உங்களது முதற் பெயரைக் குறிப்பிடுக (குடும்பப்பெயர்/ குடிப்பெயர்) ஒரு கூண்டினுள் ஓர் எழுத்து வீதம் எழுதவும். பெயர்களுக்கிடையில் ஒரு கூண்டை இடைவெளியாக விடவும். பெண் விண்ணப்பதாரி திருமணத்தின் பின் தனது பெயருடன் கணவரின் பெயரையும் சேர்த்து கடவுச்சீட்டிற்காக விண்ணப்பிப்பதாயின் அப்பெயரை குறிப்பிடவும். (இங்கு திருமணச் சான்றிதழின் மூலப் பிரதியை நிழற் பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்).

7) மேலே இலக்கம் 06 இன் கீழ் நீங்கள் குறிப்பிட்ட உங்களது பெயர் / குடும்பப் பெயர் நீங்கலாக எஞ்சிய முழுப் பெயரையும் குறிப்பிடவும். (பிறப்புச் சான்றிதழின் 2ஆம் நிரலில் உள்ளவாறு).

8) இலங்கையில் வசிக்கும் முகவரியைக் குறிப்பிடவும்
8.1 வசிக்கும் முகவரிக்குரிய மாவட்டத்தைக் குறிப்பிடவும்).

9) பிறந்த திகதியைக் குறிப்பிடுக (பிறப்புச் சான்றிதழின்படி).

10) பிறப்புச் சான்றிதழின் இலக்கத்தையும் மாவட்டத்தையும் குறிப்பிடுக (பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதியை நிழற் பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்).

11) பிறந்த இடம் - பிறப்புச் சான்றிதழில் உள்ளவாறு குறிப்பிடவும்.

12) பால் (உரிய கூண்டினுள் “√” அடையாத்தை இடவும்).

13) உங்களது தொழில்/ தொழிற்றுறை அல்லது பதவி – சொற்களுக்கிடையில் கூண்டொன்று இடைவெளி விடவும். (தொழிலை அத்தாட்சிப்படுத்துவதற்குத் தேவையான கல்விச் சான்றிதழ்களின் /தொழிற்றுறைச் சான்றிதழ்களின் / சேவைச் சான்றிதழ்களின் மூலப் பிரதியை நிழற் பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்).

14) நீங்கள் இலங்கையில் இரட்டைக் குடியுரிமையைப் பெற்றிருப்பின் உரிய கூண்டினுள் “√” அடையாளத்தை இட்டு, இரட்டைக் குடியுரிமைச் சான்றிதழின் இலக்கத்தைக் குறிப்பிடுக. (இலங்கையில் இரட்டைக் குடியுரிமையைப் பெற்றிருப்பின் அச் சான்றிதழின் மூலப் பிரதியை நிழற் பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்).

15) உங்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய கையடக்கத் தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிடுக.

16) உங்கள் மின்னஞ்சல் முகவரியைக் குறிப்பிடவும்.

17) நீங்கள் வெளிநாட்டில் குடியுரிமையைப் பெற்றுக் கொண்டுள்ள நாட்டைக் குறிப்பிடுக

18) நீங்கள் வெளிநாட்டுக் குடியுரிமையைப் பெற்றுக் கொண்டுள்ள நாட்டின் கடவுச்சீட்டு இலக்கத்தைக் குறிப்பிடுக (அக் கடவுச்சீட்டின் நிழற் பீரதியை சமர்ப்பித்தல் வேண்டும்)

19) 16 வயதுக்குக் குறைந்த பிள்ளையொன்றின் விண்ணப்பப் படிவமாக இருக்கும் பட்சத்தில் அப் பிள்ளையின் தந்தையின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை அல்லது கடவுச்சீட்டு இலக்கத்தை மற்றும் தாயின் அல்லது

பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை கடவுச்சீட்டு இலக்கத்தை ஒழுங்கு முறைப்படி குறிப்பிடவும்.

20) வழங்கப்பட்டுள்ள இரண்டு கூண்டுகளுக்குள்ளும் கூண்டுக் கோடுகளைத் தொடாதவாறு உங்களது கையொப்பத்தை இடுக.

21) விண்ணப்பதாரியின் பிரகடனத்தை வாசித்து விளங்கி கையொப்பமிடுதல் வேண்டும்.

**(ஆ) கடவுச்சீட்டொன்றைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்கள்:**

i. விண்ணப்பதாரியின் பிறப்புச் சான்றிதழ்/அனுமானிக்கப்பட்ட வயதுச் சான்றிதழின் மூலப் பிரதி அதன் நிழற் பிரதியுடன், விசேட சந்தர்ப்பங்களில் பிறப்புச் சான்றிதழ் இல்லாதிருக்கும் போது/ பிறப்புச் சான்றிதழ் தேடல் தொடர்பாக வெற்று பெறுபேற்று ஆவணம்/ பிள்ளையின் பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதி அதன் நிழற் பிரதியுடன்

ii. தேசிய அடையாள அட்டை அதன் நிழற் பிரதியுடன்

- **முக்கிய குறிப்பு** – கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணபப்படிவம். கடவுச்சீட்டை விநியோகிக்கும் போது விண்ணப்பதாரியிடம் திருப்பி ஒப்படைக்கப்படுவதுடன், அவ் விண்ணப்பப் படிவத்தையும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களையும் 10 வருடங்களைக் கடக்கும் வரை (கடவுச்சீட்டு செல்லுபடியாகும் காலம் முடியும் வரை) மிகக் கவனமாக விண்ணப்பதாரி தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.

**(இ) 16 வயதிற்குக் குறைந்த பிள்ளைகளுக்கு கடவுச்சீட்டுகளை பெற்றுக் கொள்வதற்காகச் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களும், பூர்த்தி செய்திருக்க வேண்டிய பிற தேவைகளும்.**

1. K கு.கு 35 A படிவம்.
2. பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதி அதன் நிழற் பிரதியுடன் (பிறப்புச் சான்றிதழின் ஆங்கில மொழிபெயர்ப்பு மூலப் பிரதியாகக் கருதப்பட மாட்டாது)
3. பெற்றோரின் கடவுச்சீட்டுகளில் தரவுகள் பதியப்பட்டுள்ள பக்கங்களின் நிழற் பிரதிகளுடனும், பிள்ளைகளின் பெயர்களை உட்சேர்க்கும் பக்கங்களின் (8,9 ஆம் பக்கங்கள்) நிழற் பிரதிகளுடனும் பெற்றோரின் கடவுச்சீட்டுகள்
4. பெற்றோர் கடவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொண்டில்லையெனில், அதனை உறுதிப்படுத்துவதற்கான சத்தியக் கடதாசியொன்றும் பெற்றோரின் தேசிய அடையாள அட்டைகளுடன் அவற்றின் நிழற் பிரதிகளும்.
5. பிள்ளைக்கு/ பிள்ளைகளுக்கு கடவுச்சீட்டுகளை விநியோகிப்பது தொடர்பில் பெற்றோரின் விருப்பத்தைத் தெரிவிக்கும் கடிதங்கள் (தாய் அல்லது தந்தை அல்லது இருவரும் வெளிநாட்டில் இருப்பின், அவர்களது விருப்பத்தைத் தெரிவிக்கும் கடிதங்களை, குறித்த நாட்டில் அமைந்துள்ள இலங்கைத் தூதுவராலயத்தின்/ உயர் ஸ்தானிகராலயத்தின் மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்).

6. தாய் அல்லது தந்தை காலஞ் சென்றிருப்பின் மரணச் சான்றிதழை அதன் நிழற் பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. பெற்றோர் விவாகரத்து செய்திருப்பின் விவாகரத்துச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியை, அதன் நிழற் பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. பிள்ளைக்கு தனியான கடவுச்சீட்டொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு முன்பதாக, அப் பிள்ளைகள் தமது தாயின் அல்லது தந்தையின் செல்லுபடியான கடவுச்சீட்டில் உட்சேர்க்கப்பட்டிருப்பின், அதனை முதலில் நீக்கிக் கொள்ள வேண்டும் என்பதுடன், இதற்காக கு.கு 35C படிவத்தைப் பூர்த்தி செய்து, ரூ. 500/- கட்டணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

9. பிள்ளைகள் வெளிநாடொன்றில் பிறந்திருப்பின் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட இலங்கை பிரஜை சான்றிதழை அதன் நிழற் பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

10. கடவுச்சீட்டிற்காக விண்ணப்பத்தை ஒப்படைப்பதற்காக தாய், தந்தை இருவரும் (பெற்றோர்) சமுகமளித்தல் வேண்டும்.

(ஈ) கடவுச் சீட்டுகளை பெற்றுக் கொள்ளும் போது, கீழ்க் காணும் குற்றங்களை இழைப்பது, 1955 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1961 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1993 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1998 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 2006 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 2015 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்திற்கமைய தண்டைக்குரிய குற்றங்களாகும்.

1. பொய்யான தகவல்களை வழங்குதல்.
2. மோசடியாகத் தயாரிக்கப்பட்ட அல்லது போலியாகத் தயாரிக்கப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பித்தல்
3. செல்லுபடியான கடவுச்சீட்டொன்றை தம்வசம் வைத்துக் கொண்டு இன்னொரு கடவுச் சீட்டிற்காக விண்ணப்பித்தல்
4. வேறொருவரின் கடவுச்சீட்டைப் பாவித்தல்
5. பெற்றுக் கொள்ளப்பட்ட கடவுச்சீட்டில் போலியாக மாற்றங்களைச் செய்தல்.
6. பிற நபரொருவரின் ஆவணங்களைச் சமர்ப்பித்து, கடவுச்சீட்டொன்றைப் பெற்றுக் கொள்ளல்.

**(உ) கடவுச்சீட்டொன்று காணாமல் போகும் சந்தர்ப்பத்தில் கீழ்க் காணும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.**

1. கடவுச்சீட்டு காணாமல் போனமை பற்றி பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைபாட்டின் மூலப்பிரதி

2. கடவுச்சீட்டு வெளிநாடொன்றில் காணாமல் போயிருப்பின் அந்நாட்டில் அமைந்துள்ள இலங்கை தூதுவராலயத்தின் மூலம், இலங்கைக்கு வருவதற்காக விநியோகிக்கப்பட்ட தற்காலிக பயண ஆவணம் (NMRP) அதன் நிழற் பிரதியுடன்.

3. கடவுச்சீட்டிற்கான கட்டணத்திற்கு மேலதிகமாக தண்டப் பணமாக ரூ. பத்தாயிரம் (ரூ. 10000/-) செலுத்துதல் வேண்டும் (காணாமல் போன கடவுச்சீட்டில் பத்து (10) வருட செல்லுபடிக்காலம் கடந்தில்லாதிருப்பின் மட்டுமே இத் தண்டப் பணம் அறவிடப்படுகின்றது)

(ஊ) அறவிடப்படுகின்ற கட்டணங்கள்

| | | | 16 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்காக 3 வருட காலப்பகுதிக்கு | |
|---|---|---|---|---|
| | ஒருநாள் சேவை | சாதாரண சேவை | ஒருநாள் சேவை | சாதாரண சேவை |
| சகல நாடுகளுக்குமான கடவுச்சீட்டு | ரூ. 10,000 | ரூ. 3,000 | ரூ. 5,000 | ரூ. 2,000 |
| மத்திய கிழக்கு நாடுகள் உள்ளிட்ட குறிந்துரைக்கப்பட்ட நாடுகளுக்கான கடவுச்சீட்டு | ரூ. 2,500 | ரூ. 1,000 | ரூ. 1,500 | ரூ. 1,000 |
| இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கான அவசர சான்றிதழ் | | ரூ. 500 | | |
| எல்லா நாடுகளுக்குமான அவசர சான்றிதழ் | ரூ. 3,000 | | | |

(இலங்கை அரசின் தீர்மானங்களுக்கமைய இக் கட்டணங்களில் திருத்தங்கள் செய்யப்பட இடமுண்டு)

(எ) சங்கைக்குரிய பௌத்த பிக்குகளுக்கு கடவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்தல்

i. பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதியையும், தேசிய அடையாள அட்டையையும் அவற்றின் நிழற் பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

ii. பிக்கு சான்றிதழை (சாமனேர சான்றிதழை) அல்லது பிக்கு பட்டமளிப்பு சான்றிதழை (உபசம்பதா சான்றிதழ்) அதன் நிழற் பிரதியுடன் சமர்ப்பிப்பது கட்டாயமாகும்

(ஏ) விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளல் (அரசாங்க வேலை நாட்களில்)

ஒருநாள் சேவை : மு.ப 8.30 மணி தொடக்கம் பி.ப 1.30 மணி வரை

சாதாரண சேவை மு.ப 8.30 மணி தொடக்கம் பி.ப 1.30 மணி வரை